3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1987-ம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண் மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''